BALAR KALVI

VOL. 19 - 1954-55

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்

—:o:—

"முயற்சி திருவினை யாக்கும்"

243

தொகுதி 19 | ஜய ஸு சித்திரை மீ 1954 ஏப்ரல் | பகுதி 1

CONNEMARA PUBLIC LIBRARY 18 JAN 1956 MADRAS

## பொருளடக்கம்

பக்கம்

1. ஓய்வு நேரமும் பொழுதுபோக்கு வேலைகளும் ... 1
V. நடராஜன்

2. "வாழ்வில் வளம்" அல்லது யோகாசனங்களும் மனித வாழ்வும் ... 5
கோ. ப. வேலன்

3. கணக்கு: கற்பித்தல் ... 8
T. S. ராஜகோபாலன்

4. செய்தித் திரட்டு ... 11

5. பத்திராதிபர் குறிப்பு ... 15

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 14 JUL 1954 MADRAS

## MEMBERS OF THE JOURNAL COMMITTEE

Sri S. NATARAJAN
„ R. KRISHNAMURTHY
„ K. KURUVILA JACOB
„ T. P. SRINIVASAVARADAN
„ P. DORAIKANNU MUDALIAR
„ V. NATARAJAN
„ V. ARUNAJATAI
„ L. MARIAPRAGASAM

Sri S. MARIA JOSEPH
„ J. VAIDYANATHAN
„ J. BALASUBRAMANIAM
„ G. SRINIVASACHARI
„ C. RANGANATHA AIYENGAR, *Secretary*
„ V. B. MURTHI, *Asst. Secretary.*

உள் நாடு: வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதி ரூ. 0—4—0

# பாலர் கல்வி

தொகுதி 19 | ஜய ஸ்ரீ சித்திரை மீ 1954 ஏப்ரல் | பகுதி 1


## ஓய்வு நேரமும் பொழுது போக்கு வேலைகளும்

V. நடராஜன்

வாழ்க்கையில் சதா காலமும் வேலை செய்துகொண்டிருக்க முடியாது. அது இயற்கைக்கு விரோதமானது. உடல் உழைப்பும் மனோ உழைப்பும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டது. மனோ உழைப்பு சமயமும் நரம்புகள் வேலை செய்கின்றன. ரத்தம் உதவ வேண்டியிருக்கிறது. உடல் உழைப்பு சமயத்திலோ உடல் தசைகள் சிரமப்படுவது நன்கு தெரியும். ஆகவே எந்த வேலை செய்த பிறகும் சோர்வு உண்டாகும், களைப்புத் தோன்றும். உடனே ஓய்வு தர வேண்டியது அவசியம்.

சுறு சுறுப்பும் சோர்வும் மாறி மாறி வருவதே இயல்பு. அதுவே இயற்கை நியதி. சக்தி ஒரே நிலையில் நேர்க்கோடு போல் இராமல் உயர்ந்தும் தாழ்ந்தும் வளைந்தும் இருக்கும் என வேண்டும். தாவரங்களும் மிருகங்களும் இவ்விதமே ஒரு காலம் சுறுசுறுப்பாக வேலை செய்வதும் பிறகு கொஞ்ச காலம் ஓய்வு ஆக இருப்பதும் சகஜம். தளிர் விடுங்காலம், புஷ்பிக்கும் காலம், காய்க்கும் காலம் என்பது போலவே இலைகள் உதிர்ந்து ஓய்ந்திருக்கும் காலமும் உண்டு. காலத்திற்கேற்ப வேலையும் ஓய்வும் காண்கிறோம். மிருகங்களும் ஓய்ந்து களைப்பாறித் தூங்கி இருக்கும். பனிப்பிரதேசங்களில் சில மிருகங்கள் மாரிகாலம் முழுவதும் ஓய்ந்து தூங்கி இருக்கும். அம்மாதிரியே பனிப்பிரதேசத்தில் உள்ள தாவரங்களும் வாழ்ந்து ஓய்ந்து இருக்கும்.

மனித வாழ்க்கையிலும் இவ்விதமே வேலையும் ஓய்வும் மாறி மாறி அமைந்திருப்பதே இயல்பு ஆகும். இயற்கையிலேயே இவ்வித ஓய்வு அமைந்துள்ளது அதுதான் உறக்கம். உறக்க நேரம் சிசுக்களுக்கு அதிகமாகவும், பிறகு வயது ஆக ஆக தூக்க காலமும் தினப்படி குறைந்துவிடும். ஒருவனுக்கு எட்டு மணி நேர வேலை, எட்டு மணி நேர தூக்கம். எட்டு மணி நேரம் இதர தினசரி வாழ்க்கை அலுவல்கள் என ஒரு நாள் 24 மணி நேரத்தை ஒரு பொது அளவாக விதித்து இருக்கிறோம்.

எட்டு மணி நேரத்திற்கு அதிகமாக தினசரி வேலை செய்ய நிர்ப்பந்திக்கக் கூடாது என்பதை அனுசரித்தே தொழிலாளர் கிளர்ச்சிகள் முதலில் ஆரம்பமாயின. தினம் 8 மணி நேரமே வேலைத் திட்டம் என்பதைப் பலரும் ஒப்புக்கொள்ளத் தொடங்கினர். அதுவும் அதிகப்படியானது, இன்னும் குறைக்கவேண்டும் என்ற கிளர்ச்சியும் வலுத்து வரவே அநேக இடங்களில் அந்த நேரமும் குறைக்கப்பட்டு வருகிறது.

முன் காலத்தில் ஜனங்கள் பெரும்பாலும் அன்றாட உணவுப் பொருள்களைத் தேடி உண்ணும் அலுவல்களிலேயே காலத்தைக் கழிக்கவேண்டியிருந்தது. ஜீவனோபாய அலுவல்களே வாழ்க்கையில் முக்கியம். மனிதனது தினசரி வாழ்வில் அந்த வேலையே சரியாக இருந்தது. ஆனால் நாகரீகம் பெருகப் பெருக தினசரி வாழ்வில் ஓய்வு நேரம் அதிகமாகியது. உணவு பக்குவ முறைகளும், சேமிக்கும் வழிகளும் புதிதாக வழக்கத்தில் வந்தன. வியாபாரப் பெருக்கு, பண்ட மாற்றுதல், பணம் கொடுத்து வாங்குவது முதலிய பல இனங்களில் மாறுதல்களும் முன்

னேற்றமும் ஏற்பட்டன. பலவித எந்திர சாதனங்களும் பெருகவே வாழ்க்கை தினுசே வெகுவாக மாறிவிட்டது. போக்குவரத்து சாதனங்கள் அதிகமாகி உணவுப் பொருள்கள் பல இடங்களிலிருந்து வரத் தொடங்கின. தொழில் இனங்களிலும் ஓரோர் சாரார் தத்தம் சிறப்புத் தொழில்கள் என வகுத்துப் பங்கிட்டுக் கொண்டு உழைப்பதால் ஓரோர் பகுதியினர் ஓரோர்விதத் தொழிலில் பயிற்சி பெற்று முன்னேற்றம் அடைந்தனர். மக்களது பொதுவான ஓய்வு நேரமும் தினப்படி அதிகமாகி விட்டது. இந்த ஓய்வு நேரத்தை சுக வாழ்க்கைக்கு உதவியாக்கிச் சந்தோஷமாக எவ்விதம் போக்கி வாழலாம் என்பதே இப்போது உள்ள சமூகப் பிரச்னைகளில் மிகவும் முக்கியமானது.

புதுப்புதுத் தொழில்கள் ஏற்பட்டு விட்டன. யந்திரங்களைப் பயன்படுத்திப் பலவித வாழ்க்கைச் சாதனங்களைச் செய்து கொள்ளுகிறோம். முன் காலத்தில் ஒருவன் உழைத்த கால அளவும் குறைந்து விட்டது. சொற்ப நேரத்தில் முன் செய்ததை விடப் பன்மடங்கு பொருள்களை உற்பத்தி செய்கிறோம். இரும்பு சாமானகள் பத்து மடங்கு அதிகம், மரச்சாமான்கள் ஐந்து மடங்கு அதிகம், ஆணிகள் நூறு மடங்கு, காகிதம் பத்து மடங்கு என்று பல இனங்களில் உற்பத்தி பெருகி விட்டது. இப்படிப் பலவித இனங்களைக் கணக்கிடுவோமாயின் யந்திரங்களினால் மனிதனது உடல் உழைப்பு நேரம் எவ்வளவு குறைந்துவிட்டது என்பது புலனாகும்.

தொழிலாளியின் ஓய்வு நேரம் மாத்திரம் அல்ல. குடித்தனம் நடத்தும் ஸ்திரீகளுக்கும் ஓய்வு நேரம் தினப்படி அதிகமாகிவிட்டது. காலமும் வேலையும் குறைக்கும் பலவித எந்திரங்களும் சில்லரை சாதனங்களும் எவ்வளவோ வந்து விட்டன. தேங்காய் துருவும் கருவி, காய்கறிகள் நறுக்கும் மெஷின், மாவு அரைக்கும் மெஷின், தையல் மெஷின் என்று எல்லாம் வழக்கத்தில் வந்து விடவே ஓய்வு நேரம் அதிகமாகப் பெருகி விட்டது. பட்டணவாசிகளுக்கு இன்னும் பல வசதிகள் சிறப்பாக ஏற்பட்டு விட்டன. எலெக்டிரிக் விளக்கு, எரியும் வாயு, மின்சார அடுப்பு, இஸ்திரிப்பெட்டி என்று எவ்வளவோ சாதனங்கள் தினமும் மிகுந்து உள்ள ஓய்வு நேரத்தை எவ்விதம் போக்குவது என்ற பிரச்னையே இப்போது பட்டணவாசிகளுக்குள்ள பெரும் தொல்லை.

யந்திர காலத்திற்கு முன் இவ்வளவு அதிகமான ஓய்வு நேர வசதி இல்லை என வேண்டும். பட்டண வாழ்க்கை பிரபலமாகி யந்திர சாதனங்களும் பெருகிய பிறகே இந்தப் பிரச்னையைப்பற்றி யோசித்துப் புதுப்புது திட்டங்கள் போடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. சாதாரணமாக கிராமங்களில் தேர், திருவிழா முதலிய உத்சவங்களும் கொண்டாட்டங்களும் ஓய்வு கால வேலைகள். உறியடி, மாடு விரட்டல், கிராம நடனங்கள், விளையாட்டுகள், நிலா இரவுகளில் ஆற்று மணலில் உப்புக்கோடு, செடுகுடு முதலியன பிரபலமாயிருந்தன. இவைகள் ஓய்ந்து புது மோகம் ஏற்பட்டு கால்பந்து, கிரிக்கட்டு முதலிய புது விளையாட்டுகள் கிளம்பின. இப்போது இவைகளின் மோகம் முழுவதும் குறையவில்லை எனினும், பழைய வித விளையாட்டுக்களை மறுபடியும் உயிர்ப்பிக்க ஆரம்பித்துள்ளர். செடுகுடு மறுபடியும் பிரபலமாகிவிட்டது.

பள்ளியில் வாசிக்கும் பிள்ளைகளின் ஓய்வுநேர விளையாட்டுக்களிலேயே இப்போது புரட்சியும் மறுமலர்ச்சியும் ஏற்பட்டிருப்பது ஒருபுறம். பொதுமக்களின் ஓய்வுநேர அலுவல்களைச் சீர்படுத்தும் வேலையும் முக்கியமாகிவிட்டது பொழுது போக்கு அலுவல்கள் யாவை என கவனிப்போம்—செய்தித்தாள் படிப்பது, ரேடியோ கேட்பது, சினிமா பார்ப்பது, நண்பர்களுடன் உறவாடல், விருந்தோம்பல், சீட்டாட்டம், உல்லாசப் பிரயாணம், நீச்சல், ஓட்டம், வம்புப் பேச்சு இத்தியாதி பல வேலைகளில் பட்டணவாசிகள் பொழுது போக்குவர். இவற்றில் சில வீட்டிலேயே நடைபெறும். வயது முதிர்ந்தோர்கள் பெரும்பாலும் வீடே கதியெனக் காலம் கழிப்பர். கிராமவாசிகளுக்கும் கிட்டத்தட்ட இவ்வித வசதி

களே உண்டு எனலாம். சங்கங்கள், வாசக சாலைகள், நாடக சபைகள், சங்கீதம், பிரசங்கம் முதலிய பல வழிகளும் உண்டு. இவைகள் எல்லாம் இன்னும் சீராக அமைக்கப்பட்டு உதவத் தொடங்கவில்லை.

இனி வருங்காலத்தில் ஓய்வுநேரம் இன்னும் அதிகமாகவே ஏற்படும். இப்போது திட்டமிட்டுள்ள உற்பத்திப் பெருக்க அம்சங்கள் பலன் பெற்று மக்களுக்குச் சுகவாழ்வு முன்னேற்றம் கண்டபிறகு பொழுதுபோக்கு வேலைகள் இன்னும் பிரபலமாக வேண்டிய அவசியம் தெரியும். இப்போதைய வாலிபர்கள் கல்வி பெறுங் காலத்தில் ஓய்வுநேர அலுவல்களில் பழக்கம் பெறுவது மிகவும் அவசியமாகிறது.

பொழுது போக்குவது எப்படி என்பதும் கல்வித் திட்டத்தில் ஒரு அம்சமாகிவிட்டது. பொழுதைப் போக்குவானேன், அது தானே போகிறது என்று சிலர் வாதம் செய்வதுண்டு. உடல் உழைப்பின் அவசியத்தைப்பற்றி நாம் நன்கு அறிவோம். உழைக்க உழைக்கத்தான் உடல் உறுப்புக்களும் தசைகளும் நன்கு வளர்ந்து பயிற்சி பெற்று அழகு உருவம் பெறும். உடல் சுகமும் அனுபவிப்போம். ஆனால் உழைப்பை ஒரு நிர்ப்பந்த வேலை என்று மனத்தாங்கலுடன் செய்யாமல், அதில் களிப்புடன் ஈடுபடுவதே பொழுதுபோக்கில் முக்கிய அடிப்படைத் தத்துவம். பொழுது போக்காகச் செய்யும் வேலையில் களிப்பு அனுபவிப்பது இயல்பு. தினப்படி வேலை செய்து கூலி பெறும் தச்சன் வேலை செய்வதற்கும் பொழுதுபோக்கு அலுவல் ஆகத் தச்சுவேலை செய்வதற்கும் எவ்வளவு வித்தியாசம்!

பொழுதுபோக்கு வேலைக்குப் பற்றுஆட்டம் எனலாம். அதாவது களியாட்டம் (விளையாட்டு) என்பதற்கும் இதற்கும் வித்தியாசம் உண்டு. பற்றுட்டம் என்பற்கு இங்கிலீஷில் ஹாபி (Hobby) என்போம். விளையாட்டில் உடல் பயிற்சியுடன் சகாக்களுடன் பழகும் அனுபவம் அதிகம் உண்டு. பற்றுட்டத்தில் பெரும்பாலும் தன்மையுடன் பழகும் அனுபவம் அதிகம். கொஞ்சம் சிந்தனை சக்திப் பயிற்சியும் ஏற்படும். சிறியதொரு வேலையைப் பற்றுடன் செய்து வெற்றி காணுவதில் மன உத்சாகமும் அதிகம். அவ்வித வேலைகளைப் பயன்படுத்தும் வகையில் உழைக்க வேண்டும் என்று சிலர் கருசலாம். பற்றுட்டவேலையில் பணச்செலவு, சாமான் வீண் என்று கருதலாம். அவ்வேலையினால் ஏதாவது லாபகரமான பலன் கிடைத்தால் நல்லதுதான். ஆனால் இந்த லாபம் எதிர்பார்ப்பது இரண்டாம் பட்சம். முக்கியமானது மன உத்சாகம், தான் சிந்தனை செய்து சாதித்த ஒரு பெருமை, அதனால் மனத் தெம்பு. அதுவே பூரண வாழ்விற்கு அஸ்திவாரம்.

பொழுதுபோக்கு வேலை என்பதும் ஓய்வு ஆகச் சும்மா இருப்பதும் ஒன்று அல்ல. எந்த மாற்று வேலையும் ஒருவிதப் பொழுதுபோக்கு வேலைதான். சிரமபரிகாரம் செய்து கொள்வதும் களைப்புற்றுத் தூங்குவதும் பொழுதுபோக்கு வேலை அல்ல. களைப்பாறுவதும் தூங்குவதும் உடல் உறுப்புக்களுக்கு இயற்கையில் அமைந்தன. ஆனால் சோம்பலாக இருப்பது இயற்கைக்கு விரோதம்.

பள்ளி ஆசிரியர்கள் தங்களுக்கெனவே பற்றுட்டங்களை வகுத்துக்கொள்ளுவது அவசியம். பள்ளி அலுவல்களுடன் இவைகளும் மாற்று வேலைகளாக அமைந்து அவர்கள் தினசரி வாழ்க்கையில் ஒரு புதிய சுவையையும் தெம்பையும் காணலாம். அதுவுமன்றி பிள்ளைகளுக்கும் பலவிதப் பற்றுட்டங்களில் ஈடுபட உத்சாகப்படுத்தி உதவிசெய்யவேண்டும். பிள்ளைகளுக்கும் பள்ளி அலுவல்களில் அலுப்பு குறைவதுடன், ஆசிரியர்களுடன் தோழமையுடன் பழகி மகிழும் சந்தர்ப்பங்களும் கிடைக்கும். ஆசிரிய மாணவ உறவாடல் மிகவும் சிறப்பாக வலிமையடையும்.

இடம் பொருள் ஏவல் முதலிய வசதிகளை அனுசரித்து எவ்விதமான பற்றுட்டங்களை அமைக்கலாம் என்று கவனித்துத் திட்டமிடவேண்டும் முக்கியமாகப் பள்ளியின் இடம் உபகரண வசதிகளை கவனிப்பதுடன், பிள்ளைகளின் வீட்டுச் சூழ்நிலை, பொருளாதார வசதி இவைகளை

அனுசரித்து அவர்களது பற்றுட்டங்களை ஊக்கப்படுத்தி உதவவேண்டும். கதைகள் வாசிப்பது, செய்திகள் வாசிப்பது (தான் மட்டுமல்ல பிறருக்கும் வாசிப்பது) பாட்டு, நாடகம், ஆட்டம், அபிநயம், கைத்திறன் அலுவல்கள்—ஓவியம், சிற்பம், தச்சு வேலை, படம் ஒட்டுவது, மியூசியப் பொருள்கள் சேகரிப்பது—நூற்பது, நெசவு, வர்ணமிடுவது, சாயமிடுவது, தேன் சேகரம், காகித பொம்மைகள், முதலிய பற்பல வேலைகளைக் குறிப்பிடலாம். இங்கு முக்கியமாக ஒரு அலுவலைக் குறிப்பிடவேண்டும். நமது குடும்பங்களில் ஒருவர் வாசிக்க மற்றவர் அமர்ந்து கேட்டு இன்புறும் ஒரு வழக்கத்தை இன்னும் பெருக்கவேண்டும். கதா காலட்சேபப் பிரசங்கங்கள் கேட்பது வழக்கம் தான். ஆனால் பள்ளியில் படிக்கும் பிள்ளை ஒரு சிறந்த கதையை அல்லது உலகச் செய்தி விவரங்களைத் தன் குடும்பத்தாருக்கும் அக்கம் பக்கத்தாருக்கும் படிப்பதும் அவர்கள் இன்பமாகக் கேட்பதும் ஒரு நற்பழக்கமாகும்.

பள்ளிச்சாலைகளிலேயே பற்பல மாறுதல்களும் முன்னேற்ற ஏற்பாடுகளும் இப்போது ஏற்பட்டுள. வெளிப்பிரயாணங்கள் முக்கியமாகிவிட்டன. சில பள்ளிகள் சொந்த பஸ் வண்டிகளை வைத்திருக்கின்றன. பிரதி வாரமும் மாதமும் வெளிப்பிரயாணங்களைத் திட்டமிடுகின்றன. தரிசனக் கல்வி, ரேடியோ முதலியவைகளும் உண்டு. மாணவர் வாசகசாலை, பத்திரிகைகள், கையெழுத்து சஞ்சிகைகள், பேச்சு சங்கம், நிர்வாக முறைகளில் பழக்கம்பெற மாணவர் குழுக்கள், மாணவ மந்திரிகள் முதலியன திறம்பெற நடத்தப்படுகின்றன. செஞ்சிலுவைச் சங்கம், சாரணர் படை, தேசியப் படை இவ்வகைகளும் அநேக பள்ளிகளில் உண்டு.

இவைகளையெல்லாம் நன்கு பயன்படுத்த ஆசிரியர் முன்யோசனையுடன் திட்டமிட்டு, பிள்ளைகளின் சிறப்பான தனி அம்சங்களைக் கவனித்து அவரவர்களுக்கு ஏற்றவாறு பங்கிட்டுக் கொடுத்து உதவவேண்டியது ஆசிரியரது பெரும் பொறுப்பாகும்.

---


## தமிழ் உபபாட புத்தகங்கள்

### புதிய பாடதிட்டத்திற்கேற்ப எழுதியவை

**இப்புத்தகங்கள் நமது பள்ளிமாணவர், மாணவிகளின் ஆர்வத்தை ஊட்டும் விதத்தில் எழுதப்பட்டுள்ளன. பல படங்கள் உள்ளன.**

## தேச பக்த மாலை

வித்வான் எம். சண்முகம் பிள்ளை
எழுதியது
எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.
அவர்களின் முகவுரையுடன் கூடியது

| | அணா | | அணா |
|---|---|---|---|
| 1. மகாத்மா காந்தி | 10 | 4. கவியரசி சரோஜினி | 8 |
| 2 கவியரசர் தாகூர் | 8 | 5. தேசீய கவிமணிகள் (பாரதியார், தாகூர், சரோஜினியார்) | 12 |
| 3. தேசிய கவி பாரதியார் | 8 | | |

எம். அனந்த நாராயணன், பி. ஏ., எல். டி.
எழுதியவை

6. வீர சிவாஜி அணா 10 7. சுவாமி விவேகானந்தர் அணா 12

**பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்**
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

# "வாழ்வில் வளம்"
# அல்லது யோகாசனங்களும் மனித வாழ்வும்

அகில இந்திய யோகாச்சாரியா-மாயூரம்-கோ. ப. வேலன், ஓவியப்புலவர்,
உடற் பயிற்சி வல்லுனர், காந்தி கலா நிலையம், எரிசினம்பட்டி, கோவை ஜில்லா.
படப்பிடிப்பு:—கண்ணன் ஸ்டுடியோ, கோவை.

## 9. பாழி வேதிகை ஆசனம் அல்லது சாய்மணை ஆசனம்

**"உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதாம் ஒப்பு."**
(குறள்-993)

"உடல் உறுப்புக்களால் மக்கள் தோற்றம் பொருந்தியிருப்பது பொருத்தமாகாது. ஆயின் நோயற்ற நல்லுடலும், நற்குணத்துடனும் மக்கள் பொருந்தி இருப்பதே பொருத்தம் ஆகும்." (குறள் 993—க, உ).

பெறுதற்கு அரிய பேறு மக்கட்பேறு. எழில் உடல் பெற்றேம் என்ற ஏமாப்பு மட்டும் போதுமா? வியாதி அற்ற வாழ்வு வாழவேண்டும். பயனற்ற சதைக் கோளங்கள், உருட்சி திரட்சியாய், பருத்துப் பெருத்துக் கண்டோர் காமுறும் வண்ணம் நவினுறு உடலமைப்பு மட்டும் போதாது. உழைக்கும் உடல் வேணடும். உள்ளம் திடம் வேண்டும். ஊறு இலா உள்ளுறுப்புகள்—இதயம்—குடல்—வேண்டும்.

சிலர் நாளும் நல்லாடை புனைகின்றனர். உடலிருந்து வியர்வை வெளியேற்றப்படுகின்றது. வெளிப்பட்ட வியர்வையை உடுத்த நல் ஆடை உறிஞ்சுகின்றது. அன்னவரின் அண்மையில் சென்றாலோ உடையில் இருந்து உரட்டை—கெட்ட நாற்றம்—வீசுகின்றது. இந்நாற்றத்தை மறைக்க மணம் நிறைந்த பூச்சுக்கள் பல பூசுவது கணக்கில. இடுப்பைச் சுற்றி சிறு சிறு கொப்புளங்கள் தோன்றும்; அடிக்கடி அரிக்கும். சொறிந்தால் நீர் கசியும். இடுப்பைச் சுற்றி இருந்தது இடுப்பிறகுக் கீழும் முழங்கால்களுக்கு மேலும் மிக எளிதே பரவிவிடும். அன்றன்று மணம் நிறைந்த சோப்புகள் போட்டுக் குளித்தாலும் அவர்கள் உடலிலிருந்தும்—உறுப்புக்களிலிருந்தும் வெளிப்படும் கெட்ட நாற்றத்தை—கத்தாழை நாற்றம்—மறைக்க முடியாது. உடைகளில் (Scent) "செண்ட்டுகள்" மணம் நிறைந்த தைலங்கள் தடவிக்கொண்டாலும்—தெளித்துக் கொண்டாலும், சிறிது நேரத்திற்கெல்லாம் உடைகளில் இருந்து கெட்ட நாற்றம் வெளிப்பட்டே தீரும். இப்படியே எத்தனை நாள் வாழுவது? நோய் நீங்கி நல்வாழ்வு வாழ வழி இல்லையா?

கண்டோர் காமுறும் அழகிய உடலமைப்பு, வகையோடு அணிந்த வண்ண ஆடைகள், சிங்காரச் செருப்பு அணிந்து சீரான நடைபோட்டுச் செல்கின்றனர். புரியும் புன்னகையில் முத்தெனப் பற்கள் மிளிர்கின்றன. ஆர்வமூட்டும் கலைஞானம், சோர்விலா சொல்லடுக்குகள், பொருட்செல்வம் குவிந்து கிடக்கின்றன. இவைகள் இருப்பினும் அவர் தம் உள்ளத்தின் வேதனையை, இதயத்தின் எதிரொலியை முகம் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

'Face is the index of the mind'. அவர் தம் உள்ளத்தின் வேதனை என்ன? எழுத இயலாத் துன்பம். முழந்தாள், கணைக்கால்—மூட்டுக்கு மூட்டு—சொல்லொணு வலி. நின்றாலும், நடந்தாலும் காலில் அணிந்துள்ள காற்பரடு—செருப்பு—அவர்களின் திருவடிகளிலிருந்து கசியும் நீரால் நனைந்துவிடும். மிதி அடி இல்லாது வீட்டிலே நடமாடுகின்றனர் இவர்தம் திருவடி பட்ட இடமெல்லாம், நீரில் நனைத்த காலோடு நடப்பதை ஒப்ப, காலின் அடிச்சுவடுகள் தரையில் மிகத் தெளிவாகத் தோன்றும்—இவர்கள் காலிலிருந்து கசியும் நீரால்.

இக் கசிவு நீர் கெட்ட நாற்றமுடனே அன்றி நாற்றம் அற்றோ இருக்கலாம் இவ் வியாதிக்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. இளமைத் துடிப்பு, பருவத்தின் கொழிப்பு, உள்ளத்தை அடக்க இயலா நிலை. 'தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்ட பிரசண்டன்.' பணத் திமிர், தீயோரின் பக்கத்துணை. பருவ காலத் துடிப்பில் வேட்கை முக்கிய வாழ்வு. அளவுக்கு மேலான சிற்றின்பச் சேர்க்கை. சிற்றினச் சோர்வு. வாழ்விற்கு வளம் அளிக்

தும் விந்துவை—சுக்கிலம், சுரோணிதம்—வெளியேற்றியதன் விளைவு. நல்லுணவு உண்ணாது, நாய்போல் அலைந்து நல்லொழுக்கமற்ற வாழ்வு வாழ்ந்ததில், மீந்த மீதி, இத் தீராத் தொழுநோயின் ஆரம்ப நிலை. இந்நிலை மாறி நல்வாழ்வுற வழி இல்லையா?

**உணவும் ஒழுக்கமும் மக்கட்கு**
**உண்டாயின்**
**ஊறின்றி வாழும் உலகு.** "வேலன்"

காட்சிக்கினிய கவின் பொங்கும் எழில் உடல். உடையும் நடையும் ஒய்யாரமாய் உள்ளன. இடையில் உடுத்திய ஆடை, தரையிலே துவண்டு புரளுகின்றது. பகட்டான ஆடை கண்டு பணிவோரும் உண்டு. கட்டான உடல் கண்டு களிக்கின்றார் சிலர். தரையிலே புரளும் ஆடையைக் கண்டு தகைமையாளராய் எண்ணுகின்றனர். அழகின் எல்லை கண்டு ஆதரம் அடைவோரும் உண்டு. குயிலினும் இனிய குரல் ஒலி கேட்டு குதூகலிப்புடன் உள்ளத்தை பறிகொடுப்போரும் உண்டு. ஆயினும் காட்சிக்கு இனிய அவர்தம் உள்ள நிலையை, உடல் நிலையை உணர்ந்தால் நமது உள்ளம் வேதனை உறும். அவரின் நோயினை உணர்ந்தால் பக்கமும் செல்ல பதறுவோம். அப்படி அவர்களின் வேதனை என்ன? தரையிலே புரளும் துணியை மறந்தும் கூட கணைக்கால் அளவிற்கும் தூக்கமாட்டார். அப்படி எதிர்பாராது அவர்களின் ஆடை கணைக்காலுக்கு மேல் தூக்கப்பட்டால் அவர்களின் உள்ளத்தின் துன்பம் சொல்லும் தரம் அன்று. தங்கள் காலினை—கால்களை—யாரேனும் பார்த்துவிட்டார்களோ? என்ற ஐயப்பாட்டுடன் அங்குமிங்கும் பார்த்து விழிப்பர். பார்க்கப் பரிதாபமான நிலை! அப்படி அவர்களுக்கு என்னதான் வியாதி? நினைக்க நெஞ்சம் நெகிழும். அன்னவர் கால்களைக் கண்டோர் காரி உமிழ்ந்து கடுகிச் செல்வர். கால்கள் அளவுக்குமேல் பெருத்து இருக்கும். நரம்புகளே தெரியாது. விகாரமான தோற்றத்தில் கால் விரல்களெல்லாம் மிகப் பெரிதாக இருக்கும். அதிகம் கூறவானேன்? அந்நோய்க்கு யானைக்கால் வியாதி என்று பெயர்.

ஆண் பெண், ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு இன்றி அனைவரிடமும் இவ் வியாதியைக் காணலாம். தென்னாடாகிய தொன்னாட்டிலேதான்—தென் இந்தியாவில்—அதிகம் காணப்படுகின்றது. தஞ்சை, திருச்சி, மதுரை, தென் ஆற்காடு முதலிய ஜில்லாக்களிலும், மலையாளத்திலும் யானைக்கால் வியாதி மிக அதிகம். நூறு குடும்பங்களில் ஐம்பது குடும்பங்களுக்கு குடும்பத்தில் ஒருவருக்காவது இந்த யானைக்கால் வியாதி இருக்கும். இவ்வியாதி உள்ளோர் சொல்லொணா வேதனை உறுகிறார்கள். மக்கள் முன் சென்று பேசவும் கூசுகின்றார்கள். உற்றாரும், உறவினரும், சமூகமும் இந்நோயுள்ளோரை வெறுக்கின்றனர்.


சிலருடைய கால்கள் யானையின் கால்களைவிட பெரிதாகவும் இருக்கும். அத்துடன் கால்களின் வீக்கம் முண்டும் முடிச்சுமாகவும் இருக்கும். வீக்கத்தில் புண்ணும் இருக்கலாம். புண்ணிலிருந்து குருதியோ, சீழோ அன்றி கெட்ட நீரோ வெளிப்படும். இப்படிப்பட்டவர்களின் ஆடையை பிறர் உடுத்தால் அவர்களையும் இவ்வியாதி எளிதே பீடிக்கும். கொசுக்களின் மூலமே இவ் வியாதி பெரும்பாலும் பரவுகிறது. சில குடும்பங்களின் கால்வழி—பரம்பரை நோயாகவும் இவ்வியாதி உள்ளது. இந்நோய் களைய வழி இல்லையா? வாடி வதங்கும் இதயத்துக்கு நல்லுணர்வூட்டி மக்களுடன் ஒன்றி வாழ அடிகோலுதல் இயலாதா? மக்களுக்கு மனமிருந்தால் மார்க்கம் இதோ உளது!

மிக எளிய ஆசனம். நிறைந்த பலன். மனச் சோர்வு இன்றி மகிழ்வுடன் பழக மனந்தான் தேவை. பழகப் பணம் தேவை இல்லை. நாளும் ஆசனம் பழகுங்கள். அறன் வழி நில்லுங்கள். ஒவ்வொரு நாளும் தண்ணீரில் நீராடி தூய உடை உடுத்துங்கள். நல் உணவுடன் ஆவின் பால் அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள். பால் உடல் நலத்திற்கு ஏற்ற சிறந்த உணவு. (பல்வேறு பால்களின் குணங்கள் குறித்து பின்னர் விளக்குவோம்.)

ஆசனம் பயிலும் வழி:—

சம தரையில் ஓர் விரிப்பை விரித்துக் கொள்க. அதன்மேல் இரண்டு கால்களையும் நீட்டிக் கொண்டு மல்லாந்து படுத்துக் கொள்க. கைகளை உடலை ஒட்டினாற்போல் சேர்த்து நீட்டிக்கிடத்துக. உள்ளங்கை தரையில் படிந்திருக்க வேண்டும். மூச்சை உள்ளிழுத்தவாறே இருகால்களையும் சேர்த்தாற்போல் முழங்கால் வளைக்காமல் உயர்த்துக. படத்தைப் பார்க்கவும். 45° கோணம் உள்ளவாறு—பூமியிலிருந்து சுமார் ஒன்றரை முழ உயரம் கால்களை உயர்த்துக.

மூச்சை முடிந்த அளவு அடக்கி பின்னர் வெளி விடவும். வயிறு உப்பலும் எக்கலும்




இயற்கையாகவே ஓரளவு நடைபெறும். ஆயினும் மூச்சை உள்ளிழுக்கும்போழுது வயிற்றை சிறிது அதிகமாக உப்பச் செய்ப வும். மூச்சை அடக்கும்போது வயிற்றை உப்பிய நிலையிலேயே நிறுத்துக. மூச்சை வெளியேற்றும்போழுது வயிற்றைச் சிறிது அதிகமாக எக்கவும் வேண்டும். இரண்டு நிமிஷம் முதல் ஐந்து நிமிஷங்கள் வரை யில் இவ்வாசன நிலையில் இருக்கலாம். நோயுற்றோர் பத்து நிமிஷங்கள் வரை இருக்கலாம். தொடர்ந்து அதிக நேரம் நிறுத்த முடியாதவர்கள் கால்களை தரை யில் தாழ்த்தி ஓரிரு நிமிஷங்கள் ஓய்வு பெற்று மீண்டும் செய்யலாம். ஓய்வு பெறுங்காலை—மல்லார்ந்து படுத்தவாறே —நிதானமாக மூச்சை உள்ளிழுத்து முடிந்த அளவு நிறுத்தி மூச்சை வெளி யேற்றுக.

கால்கள் பற்றுக்கோடு இல்லாது இந்நிலை யில் இருப்பது சிறிது கடினம. ஆதலின் தொடக்க நிலையில் சில நாட்கள் கால் களைச் சுவற்றின் உதவி கொண்டு நிறுத்திப் பழகுக. பின்னர் இவ்வாசனம் செய் வதற்கு எளிதாகும். இதை 'உத்தான பாத ஆசனம்' எனவும் கூறுவர். வீட்டில் உள்ள பெரியோர்கள்—கிழவர்கள், தலைக் குத் தலைஅணை இன்றி மல்லார்ந்து படுத்து கால்களை உயர்த்தி சுவற்றிலோ அன்றி தூணிலோ கால்களை ஊன்றிக்கொண்டு நெடுநேரம் இருப்பர். 'Prevention is better than cure.' நோயிலார் நோய் வாராது காப்பாற்றிக்கொள்வதற்கு இவ் வாசனம் பயில்க.

## 10. செங்கோணசம்

**ஆசனம் பயிலும் வழி :—**

விரிப்பின்மேல் மல்லார்ந்து படுக்கவும். இரு கைகளையும் பக்கத்தே உடலை ஒட்டினாற்



போல் நீட்டிக் கிடத்துக. உள்ளங்கை தரையில் நன்கு படிந்திருக்க வேண்டும். மூச்சை உள்ளிழுத்தவாறே கால்களைத் தரையிலிருந்து உயர்த்தி முழங்கால்கள் வளையாது (படத்தில் உள்ளவாறு) செங் குத்தாக நிறுத்துக. முன ஆசனத்தில் கூறியவாறே மூச்சை உள்ளிழுத்து நிறுத்தி வெளியேற்றுக. 2 முதல் 4 நிமிடங்கள் வரை பயில்க. முடிவில் மூச்சை வெளி விட்டவாறே கால்களைத் தாழ்த்துக.

**நன்மை :—**

பாழி வேதிகை ஆசனத்தின் பலனுடன் பல்வேறு ஆசனங்களுக்கும் அடிப்படையும் ஆகும்.

[குறிப்பு :—பலர், தங்கள் நோய் நீங்கும் வழிகேட்டு நிருபம் வரைகின்றனர். தயை செய்து, பதில் எழுதுவதற்காக தங்கள் முகவரி எழுதிய போதிய அஞ்சல் கட்டணம் பதித்த உறை (Postal Cover) அனுப்ப வேண்டும். ஆசனப்பயிற்சி ஆலோசனைகளுக்கோ, அல்லது நோய் களைய இயற்கைப் பரிகாரம் எழுதி அனுப்புவதற்கோ, புகல்வதற்கோ எவ்விதக் கட்டணமும் கிடையாது. நாடோறும் தவறாது அன்பர்கள் ஆசனம் பழகுவதே எனக்கு அளிக்கும் அன்புக் காணிக்கை. அன்பு. வணக்கம்.

**மாயூரம் கோ. ப. வேலன்.**]

# கணக்கு: கற்பித்தல்

## 2. முதல் வகுப்பு : எண்கள்

[T. S. ராஜகோபாலன், B. A., L. T.,
இந்து உயர்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி]

முதல் வகுப்பில் கணக்குக் கற்பிப்பவர்கள் முதன் முதலில் தெரிந்துகொள்ள வேண்டுவன : (i) கற்பிக்க வேண்டுவன எவை? (ii) இவ்வாறு கற்பிப்பதன் முக்கிய நோக்கங்கள் எவை? (iii) இவற்றை எவ்வாறு கற்பிக்க வேண்டும்?

துரைத்தனத்தார் வகுத்துள்ள பாடத்திட்டத்தின்படி இவ்வகுப்பில் கற்பிக்க வேண்டுவன : (1) 1 முதல் 10 வரையில் எண்ணுவது, (2) 10 முதல் 100 வரையில் எண்ணுவது, (3) சுலபமான கூட்டல்கள் (மொத்தம் 10-க்கு மிகைப்படாமல்), (4) 10 வரையிலுள்ள எண்கள் கொண்ட கழித்தல்கள், (5) அரை, கால் என்ற பின்னங்கள், (6) கஜம், அடி, அங்குலம் என்ற நீட்டலளவைகள், (7) படி, அரைப்படி, கால்படி என்ற முகத்தலளவைகள், (8) வாழ்க்கையில் மிக அதிகமாகப் பயன்படும் நாணயங்கள்.

இவை கற்பிக்க வேண்டிய முக்கிய நோக்கம், இவை குழந்தைகளின் தினசரி வாழ்க்கையில் பயன்படுவதும, மேல்வரும் வகுப்புக்களிலும் பயன்படுவதுமாகும். குழந்தைகள் தினசரி வாழ்க்கையில் இவை பயன்படும் விவரங்களுள் மிகவும் முக்கியமானவை :

(1) வீட்டில்: வீட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கை, இவர்கள் சாப்பிடுவதற்கு வேண்டிய தட்டுகள் (இலைகள்), இவர்களது வயது, வீட்டின் கதவிலுள்ள இலக்கம், வாரத்திலுள்ள நாட்களின் பெயர் வரிசை, மாதங்களின் பெயர் வரிசை, கடிகாரம் பார்த்து காலத்தைச் சொல்லுவது, தங்களது நிறை, உயரம், பண்டங்களைப் பிரிப்பது, டஜன், ஜோடி என்ற அளவினங்கள்.

(2) விளையாடும்போது: கிடைக்கும் பாயிண்டுகள், இவற்றுள் எவை அதிகம், எவை குறைவு என்பது.

(3) பள்ளிக்கூடத்தில் : வகுப்பறையில் பிள்ளைகளின் எண்ணிக்கை, பெஞ்சுகளின் எண்ணிக்கை, வாரத்தில் படிக்கும் நாட்கள், பீரியடுகளின் எண்ணிக்கை முதலியன.

இந்த அனுபவங்களில் மிகவும் அவசியம் வேண்டுவன :

(i) இரண்டு எண்களுள் எது பெரியது, எது சிறியது,

(ii) ஒன்று - ஒன்று - இசைவு (One-to one correspondence),

(iii) எண்ணிக்கையைக் காட்டும் எண்கள், எண்களின் வரிசை, ஒரு எண்ணுக்கு முன்னுள்ள எண், பின்வரும் எண்,

(iv) பண்டங்களின் எண்ணிக்கை,

(v) இலக்கங்களின் பெயர், எண்களின் பெயர்,

(vi) இலக்கங்களை (எண்களை) எழுதுவது.

இனி, இவ்வகுப்பில் கணக்கு போதிப்பதற்கு ஆதாரமானது என்னவென்று ஆராய்வோம். கற்பிக்க வேண்டுவன பெரியோர்க்கு மிகவும் எளியனவாகவும் சிறுர்களுக்குப் புதியனவாகவும் இருப்பதால், சிறுர்கள் ஊக்கத்துடன் கற்குமாறு பொறுமையுடன் கற்பிக்கவேண்டும். போதனைக்கான விஷயங்களைச் சிறு சிறு பகுதிகளாக்கி, இப்பகுதிகளை ஒவ்வொன்றுக சிறுர்களது மனதில் பதியச் செய்து, அடிப்படையானவற்றுள் முக்கியமான ஒரு பிரிவு இந்த வகுப்பில் தெரிந்துகொள்ளவேண்டியிருப்பதால், இப்பகுதிகளைப் படிப்படியாகக் கோவைப்படப் போதித்தல் சால அவசியமானது. இவற்றைக் குழந்தைகள் எளிதில் மனதில் ஏற்றுப் பதித்துக்கொள்ள வேண்டில், போதனைக்கு அடிப்படையாக அவர்களது சூழ்நிலையையும் பழக்கங்களையும் கொள்ளுவது சிறந்ததாம். குழந்தைகள் பள்ளிக்கு வரும்போது சூனிய மனதுடன் வருவதில்லை. வீட்டில் பழக்கத்தாலும் ஒத்த பருவத்தினருடன் பழகுவதாலும் விளையாடுவதாலும், பண்டங்களை எண்ணுவதன் மூலமாகவும், விளையாடும்போது எண்கள் அடங்கிய பாட்டுகள் மூலமாகவும் முக்கியமாக (i) இரண்டு எண்களுள் எது பெரியது எது சிறியது என்பதும், (ii) பண்டங்களுள் எது பெரியது எது சிறியது

அல்லது எது அதிகம் எது குறைவு என்பதும் நன்கு தெரியும். இவற்றையே முக்கிய அடிப்படையாகக் கொண்டு போதித்தல் வேண்டும்.

இதுவரை சொல்லியதிலிருந்தும் இந்த வகுப்பில் கற்பிக்க வேண்டியவை பின்வருவன என்று ஊகித்தல் எளிதாகும்:

1. எண்களின் பொருள்,

2. 1 முதல் 100 வரை எண்களை எழுதுவதும் படிப்பதும்,

3. 1, 1-ஆகவும், 5, 5-ஆகவும், 10, 10-ஆகவும் 100 வரையில் கூட்டுவது,

4. 2, 2-ஆக 20 வரையில் கூட்டுவது,

5 முதலாவது, இரண்டாவது, மூன்றாவது முதலிய வரிசை எண்களின் பொருள்.

குழந்தைகள் தாங்களே பண்டங்களைப் பார்த்து விஷயங்களை மனதில் ஏற்பது சாலச் சிறந்ததாதலால், விளையாட்டின் மூலமாகவும் விஷயங்களை அனுசரித்துக் காட்டும் அனுபவங்கள் மூலமாகவும் விஷயங்களை மனதில் பதித்துக்கொள்ளச் செய்ய வேண்டும். இந்த அநுகாரங்கள் முன்னதாகத் திட்டமிடப்பெற்றால், குழந்தை இவற்றை ரஸித்து, கணக்கில் தேர்ச்சியும பெறுவது திண்ணம்.

## எண்களின் பொருள்

முதன்முதலாகக் குழந்தைகள் தெரிந்துகொள்வது ஒன்று, இரண்டு, மூன்று என்ற எண்கள். இவை மனதில் படிவதற்கு ஆதாரமாவன:

(i) ஒரு குவியலிலுள்ள எண்ணிக்கை, வேறொரு குவியலிலுள்ள எண்ணிக்கையை விடப் பெரியது என்று பார்த்தவுடன் சொல்லுவது,

(ii) இரண்டு விரல்கள், இரண்டு கால்கள், இரண்டு வண்டிகள் என்று அறிந்துகொள்ளும்போது, இரண்டு என்ற வெற்றெண், விரல்கள், கால்கள், வண்டிகள் இவற்றிற்குப் பொது என்றும்; இரண்டு பேர் சாப்பிட உட்கார்ந்தால், அவர்களுக்கு இரண்டு இலைகளும் இரண்டு கோப்பைகளும் (டம்ளர்களும்) வேண்டுமென்பதும்,

(iii) எண்கள் கற்கும்போது, இரண்டு என்பது 1-ஐ விடப் பெரியது, 1 அதிகம் என்பதும், 3 என்பது 2-ஐ விடப் பெரியது, 1 அதிகம் என்பதும்,

(iv) 1, 2, 3......10 வரையில் எண்களின் வரிசை,

(v) இந்த வரிசைப்படி பண்டங்களை எண்ணுவது.

அடிப்படையான இவற்றில் ஆற்றல் இருந்தால்தான் மற்றை நான்கு பிரிவுகளையும் எளிதில் ஏற்கலாகும். ஆதலால் இவ் விஷயங்கள் நன்கு மனதில் படிந்துள்ளனவா என அடிக்கடி சோதனை செய்வது அவசியம். எனினும் இவை சோதனை செய்யப்படும்போது சோதனை என்பது தோன்றாத வகையில் செய்யப்படவேண்டும். மேலுள்ள பிரிவுகள் ஒவ்வொன்றினும் போதனை முறைக் குறிப்புக்களும், சோதனைப் பயிற்சிகள் சிலவும் கீழே கொடுத்துள்ளேன்.

முதலாவது: குவியல்களின் (ராசிகளின்) சிறுமை பெருமை.

பூங்கொத்துக்கள், புளியவிரைக் குவியல்கள், சித்திரங்கள் இவற்றை இரண்டு இரண்டாகக் காட்டி, எந்தக் கொத்தில் அதிக அதிக மலர்கள் இருக்கும் என்று பார்த்தே சொல்லப் பழக்கவேண்டும்.

சோதனை: (i) யாரிடம் அதிகப் பழங்கள் இருக்கின்றன?

(ii) எந்த பெஞ்சில் குழந்தைகள் அதிகம?

(iii) எந்தக் கட்டத்தில் புள்ளிகள் குறைவு?

இரண்டாவது: ஒரு குவியலிலுள்ள எண்ணிற்குச் சமமான எணணுடைய வேறொரு குவியல்.

விளையாட்டின் மூலமாக இதை எளிதில் அறிவிக்கலாம். உதாரணமாக, விளையாட்டிற்கு ஒரு பக்கத்தில் 3 பேரை நிறுத்தி, எதிர் கட்சிக்கு இத்தனைபேரை வரச் சொல்லுவது.

சோதனை: (i) நான்கு பலகைகளை வைத்து, இற்றிற்குச் சரியாக பலபங்களை வைக்கச் சொல்லுவது,

(ii) ஐந்து சோழிகளை வைத்து, இவற்றிற்குச் சமமாக வேறொரு குவியல் சோழி வைக்கச் சொல்லுவது.

மூன்றாவது: கிரமப்படி எண்களின் பெயர் குழந்தைகள் வீட்டில் 1, 2, 3, என்ற எணகளின் பெயரையும் உபயோகத்தையும் கற்றுக்கொள்ளுகின்றன. இதனை அடிப்படையாகக்கொண்டு, 2 என்பது 1-ஐ விட ஒன்று பெரியது என்றும், 3 என்பது 2-ஐ விட ஒன்று பெரியதென்றும், இவ்வாறு

அடுத்த எண் 4 என்றும், இவ்வாறு 10 வரையில் தெரிந்து கொள்ளவேண்டும்.

3 விரைகளை வைத்து, குழந்தைகளை இவற்றை எண்ணச் சொல்லவேண்டும். இவற்றுடன் 1 சேர்த்து, இன்னும் 1 விரை அதிகம் இருக்கிறது. இபபோது 1, 2, 3, 4 விரைகள் உளளன என்றும், 1, 2, 3. பின்பு 4 என்றும் கற்பிக்க வேண்டும். இவ்வாறே 10 வரையில் கற்பிக்க வேண்டும்.

சோதனை : (1) உனக்கு எத்தனை கண்கள் ?
(2) நாற்காலிக்கு எத்தனை கால்கள் ?
(3) இந்தக் கையில் எத்தனை விரல்கள் நீட்டியுள்ளன ?

"ஒன்று யாருக்கும் தலையொன்று" என்ற பாட்டைச் சொல்லச் செய்து, தலை ஒன்று, கண்கள் இரண்டு, முதலியவற்றைச் சுட்டிக்காட்டி, அவ்வப்போது எண்ணிற்கு ஏற்ப விரலை நீட்டச் செய்யலாம்.

"எலிராஜா வீட்டிலொரு கலியாணம் வந்ததாம்" என்ற பாட்டைத் தகுந்த சித்திரத்தின் மூலம் சொல்லலாம். சித்திரத்தில் ஒரு எலி, இரண்டு எலிகள்,...என்று எண்ணச் சொல்லலாம்.

நான்காவது : எண்களின் வரிசை மனதில் நன்கு பதியவேண்டும். 1 முதல் 10 வரையில் பொட்டுக்கள் அல்லது சதுரங்கள் அடங்கிய 10 அட்டைகளை, 1 பொட்டு உள்ள அட்டை, 2 பொட்டுக்கள் உள்ள அட்டை என்று வரிசையாக அமைக்கச் செய்யவேண்டும்.

பெண் குழந்தைகள் அம்மானை அல்லது கழற்சிக்காய் ஆடும்போது பின்வரும் பாட்டைப் பாடுகின்றனர் :

கட்டை ஓர் ராமா! பட்டாபி ராமா!
ரட்டைச் சிலைகொண்டு ராமபாணங் கொண்டு
இளையபெருமாளோடும் கூடி நடந்தார்.
மூணு தலை வீரியர்க்கு முன்னமுன்னம் சூர்ப்பணகை
மூக்கொடு காது தனையரிந்தார்,
நாலு கால் பொன்மானைக் காட்டி ராவணன்
அழகுள்ள சீதையைக் கொண்டொளித்தான்
ஐயா ராமனும் கவந்தனைச் சங்கரித்து
அழைத்து சபரிக்கு மோட்சம் கொடுத்தார்,
ஆறு, அவன் வாலியைக் கொன்று (அ)வன் தம்பிக்கு
கொடி சூடிப் பட்டமுடி சூடினார்.
ஏழும்மா ராமனும் இசைந்தவன் தம்பிக்கு
இசைந்த குடற்கோர் அம்பு போட்டார்;
எட்டரக் கடலான வானர சேனைகள்
மலைகளைத் தூக்கி அணைகட்டத் தான்
ஒன்பதாங் கோட்டை அழகுள்ள லங்கைக்கு
அரைநாழிப் போதிலே கொள்ளி வைத்தார்,
பத்துந் தலை அரிந்து சீதை சிறை மீட்டுப் பட்டாபி ராமர் அயோத்தி ஆண்டார்.

சோதனை : (i) 2-க்கு அடுத்த எண் என்ன ?
(ii) 5-க்கு முன் எந்த எண் ?

ஐந்தாவது : வரிசைப்படி எண்ணக் கற்பது.

வகுப்பறையில் கதவுகள், அறைகள், பெஞ்சுகள் முதலியவற்றை எண்ணச் செய்ய வேண்டும்.

# செய்தித் திரட்டு

(1) ஆரம்ப ஆசிரியர் சங்கம், மணலூர் பேட்டை.

3-4-54ல் ஷை சங்கத்தின் கூட்டம் மணலூர்பேட்டை மாவட்டக் கழக உயர் துவக்கப் பள்ளியில், தலைமை ஆசிரியர் திரு. P. S. சேஷாத்திரி அய்யங்கார் அவர்கள் தலைமையில் கூடியது. திரு. D. துரைராஜ் கடவுள் வணக்கம் பாடினார். சென்ற கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புக்கள் அங்கீகரிக்கப்பட்டன. தலைவர் முடிவுரைக்குப் பிறகு சங்க உபகாரியதரிசி திரு. V. வெங்கடநாராயணன் வந்தனோபசாரம் கூறியபின் தேசீய கீதத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

(2) சித்தலிங்கமடம் ஆசிரியர் சங்க ஸெண்டர்.

3-4-54ல் சித்தலிங்கமடம் ஆசிரியர் சங்கக் கூட்டம், திருக்கோவலூர் வட்டப் பள்ளிகளின் துணை கண்காணிப்பாளர் உயர் திரு. S. R. தியோடர் அவர்கள் தலைமையில் கூடிற்று.

இறைவணக்கம் சித்தலிங்கமடம் போர்டு உயர் துவக்கப்பள்ளியின் ஆசிரியர் திரு. D. நாராயணசாமி செட்டியாரால் பாடப்பட்டது. தலைவரின் முன்னுரைக்குப் பின்னர் செயலாளரால் சென்ற கூட்ட நிகழ்ச்சிகள் வாசிக்கப்பட்டு, சுற்றறிக்கைகளும், ஆணைகளும் வாசிக்கப்பட்டன.

பின்னர் "சாரண இயக்கத்தின் முக்கியமும், அதனை ஆரம்பப் பள்ளிகளில் அமைத்தலும்" என்பதைப்பற்றி ஆசிரியர் திரு. D. மணவாளன் என்பவராலும், "சாலை விதிகளும், வரிசை ஒழுங்கும்" என்பதை போதிக்கும் முறையைப்பற்றி ஆசிரியர் திரு. T. அண்ணாமலை என்பவராலும், திருக்குறளில் "நாடு" என்னும் அதிகாரத்தைப்பற்றி ஆசிரியர் திரு. V. இராச மாணிக்கம் என்பவராலும் சொற்பொழிவுகளாற்றப்பட்டன.

தலைவர் தம் முடிவுரையில் பள்ளிகளில் கவனிக்கப்படவேண்டிய சுகாதார அமைப்பு, மாற்றியமைககப்பட்ட கல்வி திட்டத்தில் ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைகளும், பொறுப்புகளும், மாணவர்களிடையே ஊட்டவேண்டிய கலை உணர்ச்சி முதலிய யாவற்றையும் உணர்ச்சி ததும்ப எடுத்துக் கூறினார்.

(3) வாலாஜாபாத் இந்துமத பாடசாலை.

(1) 4-4-1954 ஞாயிற்றுகிழமை காலை இந்து மத பாடசாலையின் 38ம் ஆண்டு நிறைவுவிழா சென்னை மாகாண அரசாங்கத்தின் உட்பொறுப்புத் துறையின் துணைச் செயலாளர் திரு. எஸ். சிதம்பரம், எம். ஏ. ஐ ஏ. எஸ், அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. மதுரை ஜில்லா காந்தி கிராமத்தின் தலைவியர் டாக்டர் டி எஸ். சௌந்திரம் இராமச்சந்திரன், எம். பி. பி. எஸ்., எம். எல். ஏ., அவர்கள் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள் "பிரசண்ட விகடன்" ஆசிரியர் திரு. நாரண துரைக் கண்ணன் அவர்கள் அறிவுரை கூறினார். சுதேசமித்திரன் இதழின் துணையாசிரியர் திரு. பி கோதண்டராமன், எம். ஏ., பி. எல். அவர்கள் மாணவர்களுக்கு வாழ்த்து வழங்கினார்கள்,

(2) சென்னை மாகாண அரசாங்கத்தின் மின்சாரத் துரையின் தலைமை இஞ்ஜினீயர் திரு. வி பி. அப்பாதுரை முதலியார் அவர்களுக்கும், ஆவணப்பதிவுத் துறையின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. பி ஆறுமுக முதலியார் அவர்களுக்கும் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில பாராட்டு வாழ்த்து விருந்து நடைபெற்றது. வேலூர் ஜில்லா மாஜிஸ்திரேட் திரு வி இரத்தின முதலியார், பி ஏ., பி. எல், அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்றனர். சென்னை, செங்கற்பட்டு, காஞ்சீபுரம் ஆகிய இடங்களிலிருந்து பெருமக்கள் பலர் விழாவிற்கு வருகை புரிந்து சிறப்பித்தார்கள்.

(4) திருவண்ணாமலை முனிசிபல் ஆரம்ப ஆசிரியர் யூனியன்.

4-4-54ல் யூனியன் ஆண்டு விழா நடந்தேறியது. ஸ்ரீ T. S. சுவாமிநாத முதலியார், நகராண்மைக் கழகத் தலைவர், விழாவிற்கு தலைமை வகித்தார். தேனீர் விருந்துக்குப்பின் செயலாளர் A. குப்புசாமியால் ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. நகர் மன்ற உறுப்பினர் ஸ்ரீ T. R. வெங்கோபராவ் "பெற்றோரும்—ஆசிரியரும்" என்பதைப்பற்றியும்; ஆணையாளர் ஜனாப் K. அப்துல் ரஹீம் "ஆசிரியரும்—கடமையும்" என்பதைப்பற்றியும; வகீல் ஸ்ரீ A. நாராயணசுவாமி முதலியார் "ஆசிரியரும்—வருங் காலமும்" என்பதைப்பற்றியும் சொற்

பொழிவாற்றினார்கள். தலைவர் தம் முடிவுரையில் ஆசிரியர்கள் யாருக்கும் அஞ்சாமல் தங்கள் கடமையைச் செய்வதில் ஊக்கமும் உற்சாகமும் கொண்டு உழைக்க வேண்டுமென்றும் மனச்சாட்சிக்கும் தெய்வத்திற்கும் விரோதமில்லாமல் நடக்கவும் கேட்டுக்கொண்டார். யூனியன் தலைவர் C. வீராசுவாமி நாயுடுவால் நன்றி கூறப்பட்டது.

(5) ஆரம்ப ஆசிரியர் சங்கம், எட்டயபுரம்.

6-4-54ல் சங்கக் கூட்டம் வி. நாராயணசாமி தலைமையில் நடைபெற்றது. செயலாளர் கி முத்துராமகிருஷ்ணன் வாசித்த சென்ற கூட்ட வடவடிக்கையையும் வரவு செலவு கணக்குகளையும் யாவரும் ஒப்புக்கொண்டனர்.

எம். ஜெயராஜ் "குறள்" பற்றியும், எம். ஏ. ராமசர்மி "உரம் தயாரித்தல்" பற்றியும் பேசினர்.

(6) உயர் துவக்கப்பள்ளி, பெரிச்சனூர்.

9-4-54ல் மாணவர் சங்கம் திருக்கோயிலூர் வட்ட கண்காணிப்பாளர் உயர் திரு. G. கந்தசாமி, B.A.L.T. அவர்கள் தலைமையில் கூடிற்று. மாணவர்களால் இறை வணக்கம் பாடப்பட்டபின், பத்திரிகை செய்தி வாசிக்கப்பட்டது. பிறகு "மாதர் முன்னேற்றம்" என்பதுபற்றி மாணவர்களும், தலைமை ஆசிரியரும் பேசினார்கள். செயலாளர் சீனுவாசன் நன்றிகூற நாட்டுப் பாடலுடன் கூட்டம் முடிவுற்றது.

(7) குளித்தலை வட்ட ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம்.

10-4-54ல் ஆண்டு விழா கடம்பர் கோவில் உயர்தர ஆரம்பப் பள்ளியில் திருச்சி ஜில்லாக் கல்வி அதிகாரி திரு. G வேதக்கண், M.A., B.T., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. 215 ஆசிரியர்களும் திரளான பொது மக்களும் நன்கு அலங்கரிக்கப்பட்ட பந்தலில் குழுமினர்.

ஸ்ரீ A. ஆளவந்தார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திரு. K. E. சுந்தரம், B.A., B.T., அவர்கள் பொருட்காட்சி சாலையைத் திறந்துவைத்து ஆசிரியர்களின் அரிய சேவைகளைப் புகழ்ந்து பேசினார்.

ஆசிரியர்கள் விநோத உடைகளில் நடித்து மக்களை மகிழ்வித்தனர். திரு. M. ரம்போலா மாஸ்கரென்ஸ் "எண் குணத்தார்" என்னும் பொருள் பற்றியும் ஆசிரியர் திரு. R. தயாநிதி "ஆசிரியர்கள் உலகம்" என்பது பற்றியும் விரிவுரையாற்றினார்கள்.

பொருட்காட்சியில் ஆசிரியர்களின் உயர்தர கைத்திறனுக்கு ஸ்ரீ P. மகாலிங்கம், பாட்மிண்டன் கிளப் செயலாளர், இரண்டு வெள்ளிக் கோப்பைகள் நன்கொடை அளித்தார்.

குளித்தலை ஊராண்மைக் கழகத் தலைவர் திரு K. R. வையாபுரி சோழகர் ஆசிரியர்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும் பரிசுகளும், நன்மதிப்பிதழ்களும் வழங்கினார்.

தலைவர் திரு. G. வேதக்கண் அவர்கள் ஆசிரியர்களின் அரிய சேவைகளைப்பற்றியும் பிற்கால வாழ்க்கைக்கு மாணவர்களுக்கு கல்வி மட்டுமின்றி ஒழுக்கம், ஒழுங்கு, ஒற்றுமை இம்மூன்றும் நன்கு போதிக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்.

(8) வேப்பந்தட்டை குறுவட்ட ஆரம்ப ஆசிரியர்கள் கழகம்.

11-4-54ல் இக்கழகத்தின் ஆண்டுவிழா அன்னமங்கலம் சிறுமலர் தொடக்கப் பள்ளியில் பெரம்பலூர் வட்ட கல்வி கண்காணிப்பாளரான திருவாளர் E. S. சுவாமிநாதன் அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது. கடவுள் வணக்கம் பள்ளி மாணவிகளால் பாடப்பட்டது. பெரம்பலூர் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு. P. S. கதிர்வேல் கொடியேற்றுவித்து மூவர்ணக்கொடி உண்டாகிய வரலாறும், தேசத்துக்குக் கொடியின் அவசியத்தையும் எடுத்துக் கூறினார். பின்னர் அன்னமங்கலம் ஊராட்சிக் கழகத் தலைவர் திருவாளர் அருளானந்தம் சேர்வை ஆண்டுவிழாவைத் துவக்கி வைத்து சங்கத்தின் அவசியத்தைப்பற்றி வலியுறுத்தினார்.

திருச்சிராப்பள்ளி அர்ச். சூசையப்பர் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் திரு. ரம்போலா மாஸ்கரனேஸ் "இலக்கிய இன்பம்" என்பதுபற்றித் திருக்குறள் — தேவாரம் — திருவாசகம் — திருவருட்பா—பாரதியார் பாடல்கள் ஆகிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டிப் பேசினார்.

சங். கெளடி ஐயர் "ஆசிரியரும்—மாணவர்களும்" என்பது பற்றியும், "ஆசிரியர் முன்னேற்றம்" என்பதுபற்றி வழக்கறிஞர் திரு. K. சாரங்கராஜ உடையாரும்;

"ஆசிரியரும் பெற்றோரும் என்பதுபற்றி பூலாம்பாடி ஊராட்சிக் கழகத் தலைவர் திருவாளர் தேவராஜ ரெட்டியாரும்; "தமிழ் இன்பம்" என்னும் பொருள்பற்றி பெரம்பலூர் நாட்டாண்மைக் கழக உயர் நிலைப்பள்ளி ஆசிரியர் திரு. சா. செல்வண்ணனும்; "கிராம ஆரம்பக் கல்வி" என்னும் பொருள்பற்றி கூட்டுறவு பண்டக சாலைத் தலைவர் திரு. S. அண்ணாமலை உடையாரும்; "ஆசிரியருக்கு அரசாங்கம் செய்வது என்ன?" என்பதுபற்றி திருவாளர் N. பரமசிவத்துடையாரும்; "ஆசிரியரும் சன்மார்க்கப் போதனையும்" என்பதுபற்றி S. ஆரோக்கிய சாமிநாதரும் பேசினார்கள்.

(9) ஆரம்ப ஆசிரியர் சங்கம், நல்லூர்சரகம் விருத்தாசலம் வட்டம்.

23-4-54ல், சங்க வருடாந்திர விழா, தென்னாற்காடு மாவட்டக் கல்வி அதிகாரி உயர் திரு. V. ஆனந்தராஜ் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இறை வழிபாட்டிற்குப் பின்னர் சங்க காரியதரிசி K. வெங்குசாமி அய்யரால் ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது. தலைவர் தேசியக் கொடியை ஏற்றிய பிறகு விருத்தாசலம் வட்ட கல்வி கண்காணிப்பாளர் ஸ்ரீ அந்தோணியாகப்பன் "வகுப்பில் ஆசிரியர்" என்பதுபற்றியும்; உதவி கண்காணிப்பாளர் வரதராசன் "ஆசிரியர் சங்கக் கூட்டத்தின் அவசியம்" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர். மாணவ மாணவிகளால் கும்மி, கோலாட்டம், சம்பாஷணை போன்ற பல கலா நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன

(10) ஆரம்ப ஆசிரியர் சங்கம், நத்தம்.

22-4-54ல் ஆசிரியர்கள் சங்க ஆண்டு விழா மதுரை ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீ பி. வி. வெங்கடவரதன் தலைமையில் நத்தம், கோவில்பட்டி போர்டு மெயின் ஆரம்பப்பள்ளியில் கொண்டாடப்பட்டது. வரவேற்புக் கமிட்டி காரியதரிசியும், பாடசாலை ஹெட்மாஸ்டருமான ஸ்ரீ எஸ். ராயப்பன் ஆரம்ப ஆசிரியர்கள் சார்பில் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார். ஆண்டு அறிக்கையை, காரியதரிசி ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாசன் சமர்ப்பித்தார். அக்ராசனர் தம் முகவுரையில் புதுக் கல்வி முறைத் திட்டம் பற்றி விரிவாகப் பேசினார். மேலூர் பள்ளிகள் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சற்குணம், உதவி ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீ எம். பொன்னையா ஆகியவர்களும், புதுக் கல்வித் திட்டம் பற்றிப் பேசினர். ஸ்ரீ எஸ். ராயப்பனின் வந்தனோபசாரத்துடன் விழா முடிவுற்றது.

(11) பெற்றோர் சங்க ஆண்டு விழா.

22-4-54ல் பெற்றோர்கள் சங்க ஆண்டு விழா மதுரை ஜில்லா கலெக்டர் உயர் திரு. ஸி. ஏ. ராமகிருஷ்ணன், ஐ. ஸி. எஸ். அவர்கள் தலைமையில் பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. கலெக்டரை வரவேற்று ஜனாப். என். எம். முகம்மது மீரான் ராவுத்தர் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார். கலெக்டர் தம் உரையில் கல்வியின் அவசியத்தை மக்கள் இப்பொழுது நன்கு உணர ஆரம்பித்து விட்டதாயும ஆசிரியர்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்கும் கல்வியோடு பெற்றோர்கள் நின்று விடாது தாங்களும், தங்கள் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்ட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

(12) சொக்கலிங்க வித்தியாசாலை, லெட்சுமி புரம்.

28-4-54ல் திருநாவுக்கரசர் விழா வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. G. சுவாமிநாதய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இறை வணக்கத்திற்குப் பிறகு திருநாவுக்கரசர் வரலாறு, தேவாரம் பாடிய விதம் முதலியவைபற்றித் தலைவரவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்கள், சொ. வி. மாணவ மாணவிகளின் பாட்டு, பேச்சு, கும்மி, கோலாட்டம் நடைபெற்றன.

(13) ரிஷிவந்திய ஆசிரியச் சங்க ஆண்டு விழா.

24-4-54ல் ரிஷிவந்தியத்தில் Sri. E. S. சிவகொழுந்து, கள்ளக்குறிச்சி ரேஞ்சு டிபுடி இன்ஸ்பெக்டர் தலைமையில் கொண்டாடப்பட்டது. L. தண்டபாணி "ஆதாரக் கல்வியைப்"பற்றியும்; A. வீரப்படையாச்சி "வள்ளுவரும் வாழ்க்கையும்" என்பதைப் பற்றியும்; V. பாலகிருஷ்ணன் "ஆசிரியரின் வாழ்க்கை" என்பதைப்பற்றியும் பேசினார்கள். L. தண்டபாணியால் வீணை, குன்னக்கோல்; சிறுமியர்களால் நடனக் கச்சேரியும் அனைவருக்கும் பெரும் மகிழ்ச்சியை அளித்தன.

(14) சாத்தூர் மாவட்ட ஆரம்ப ஆசிரியர் முதலாவது மகாநாடு.

24 4-54ல் ஸரஸ்வதி உயர்தர ஆரம்பப் பாடசாலை, உப்பத்தூரில் நடைபெற்றது.

மகாநாட்டுத் தலைவர் :—சாத்தூர் A. V. உயர்நிலைப்பள்ளி. ஸ்ரீ M. நவநீத கிருஷ்ணன், B. A L. T. அவர்கள்.

வரவேற்புக் கழகத் தலைவர் ஸ்ரீ S. ஆதி நாராயண அய்யர் அவர்கள். புதிய கல்வித் திட்டத்தின் பாதக சாதகங்களைப்பற்றியும், இம் மகாநாடு கூடுவதற்கான அவசியத்தைப்பற்றியும் பேசி வரவேற்புரை நிகழ்த்தினார்.

மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ M. நவநீத கிருஷ்ணன். B. A., L. T. அவர்கள் ஆசிரியரின் கடமை, அந்தஸ்து, உரிமை இவைகளைப்பற்றி விபரமாகத் தலைமையுரை நிகழ்த்தினார்.

சம்பளச் சலுகை, பாடதிட்டம், E. S. L C, S. S. L. C. பரீட்சைகள், புதிய கல்வி திட்டம் முதலியனபற்றி 18 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## தென் இந்திய ஆசிரியர் சங்கம்

### 1954 ஏப்ரல் மாதத்திய நாட்குறிப்புக்கள்.

5-4-54 : மிஸ்டர் F. L B llowsக்கும் அவர் மனைவியருக்கும் தேனீர் விருந்தளிக்கப்பட்டது.

14-4-54 : பாலர் கல்வி—பிப்ரவரி 1954—பிரசுரம்.

23 4-54 : தென்னிந்திய ஆசிரியன்—பிப்ரவரி 1954—பிரசுரம்.


**ஆரம்ப பாடசாலைக்குரிய எமது பாட புத்தகங்கள்**

## நமது தாய்மொழி வாசகம்

ஆசிரியர் N. பரமசிவ அய்யர், பி. ஏ., எல். டி.

| | | | அ. | பை |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) | .... | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | .... | 5 | 0 |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | .... | 6 | 0 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | .... | 7 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | .... | 7 | 6 |

எமது புதிய கணக்குப் புத்தகங்கள் புதிய பாடதிட்டத்திற்கேற்ப பல புதிய நோக்கங்களுடன் எழுதப்பட்டுள்ளன.

## கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

ஆசிரியர் S. ஜகந்நாதன்
(கிண்டர்கார்டன் உதவி ஆசிரியர், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, சென்னை)
J. ராமச்சந்திரன், B. A. (HONS.) M. Ed. திருத்தியமைத்தது

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) | .... | அணா | 5 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | .... | ,, | 6 |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | .... | ,, | 10 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | .... | ,, | 13 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | .... | ,, | 14 |

**பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்**
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

# பத்திராதிபர் குறிப்பு

## ஆரம்பக் கல்வி

ஆரம்பக் கல்வியின் நிலைமை திருப்தி காமாக இல்லை என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். ராஜாஜி அமுலுக்குக் கொண்டுவந்த திட்டமும் கைவிடப்பட்டு விட்டது. ஆரம்பக் கல்வி முன்னிருந்த நிலையிலேயே இருந்து வருகிறது. சமூகத்திற்கும், மக்கள் வாழ்க்கைக்கும் இயைந்த படி ஆரம்பக் கல்வித்திட்டத்தை திருத்தி அமைப்பது அவசியமாகும்.

ஆரம்பக் கல்வியைப் பற்றிப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டியை அமைப்பதாக கல்வி மந்திரி கூறியுள்ளார். அவ்வாறு கமிட்டி அமைக்கப்படுமாயின், சிறுவர்கள் என்ன என்ன பாடங்களைக் கற்கவேண்டும், எவ்வளவு நேரம் கற்கவேண்டும் என்ற பிரச்னைகளை மட்டும் ஆராய்ந்து அறிக்கை எழுதிவிட்டால் பயனில்லை. ஆரம்பக் கல்வியைப் பற்றிய எல்லாவித பிரச்னைகளையும் ஆராய்ந்து யோசனை கூறுவதனால்தான் நற்பயன் உண்டாகும்.

ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளம், லீவ் ரூல்கள், பிராவிடென்ட் பண்டு, தொடர்ந்து வேலையில் இருக்கும்படியான சூழ்நிலை, இன்ஷூரன்ஸ், பென்ஷன் திட்டங்கள் முதலியன நன்று சிந்திக்கப்பட்டு, தகுந்த திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

மேலும் ஆரம்ப ஆசிரியர்கள் தாங்கள் வேலை செய்யும் இடங்களில் சமூக வாழ்க்கையில் ஈடுபட்டு நேர்மையான தலைவர்களாக விளங்கவும் வசதிகள் அளிக்கப்பட வேண்டும்.

ஆரம்பப்பள்ளிகளில் புது முறைகளில் கல்வி கற்பிக்கவும், எண்ணும் எழுத்தும் பொது அறிவும், உடல் உழைப்பும் வாழ்க்கையில் இன்றியமையா திறமைகள் என பொது மக்கள் எண்ணும்படியாகவும் கல்விமுறை அமையவேண்டும்.

இப்போது ஆரம்பப் பள்ளிகள் பல விதமான மானேஜ்மெண்டுகளின் கீழ் இருந்து வருகின்றன. ஜில்லா போர்டு, முனிசிபாலிடி, பஞ்சாயித்துக்கள் ஆரம்பப்பள்ளிகளை நடத்துகின்றன. உதவி பெறும் பள்ளிக்கூடங்களும் உள. இவைகளுக்கெல்லாம் அரசாங்கம் பண உதவி செய்து வருகிறது. ஏன் எல்லாப் பள்ளிக்கூடங்களையும் சர்க்காரே நடத்தக் கூடாது? அவ்வாறு நடத்தினால் இப்போது செலவாகும் பணத்தைவிட அதிகமாக சர்க்கார் செலவழிக்க வேண்டியிருக்குமா? என்ற பிரச்னையை அலசி ஆராய்ந்து முடிவு காண்பது அவசியம்.

ஆதாரக் கல்வி மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் ஏற்றது என்று சொல்லப்படுகிறது. அக்கல்வியைக் கற்பிக்கும் பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் போதனா பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஆதாரக் கல்வியையே ராஜ்யம் முழுவதிலும் அமலுக்குக் கொண்டுவருவதா அல்லது அதைப் பரீட்சார்த்தமாக சில இடங்களில் மட்டும் நடத்துவதா என்பதற்கும் முடிவு காணவேண்டும்.

அரசியல் சட்டப்படி பத்து ஆண்டுகளுக்குள் எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்கூடத்திற்கு வந்து படிக்கும் வசதி பெறவேண்டும். 1960ம் ஆண்டிற்குள் இவ்வித வசதியை ராஜ்ய சர்க்கார் செய்து தரவேண்டுமானால் ஆரம்பக்கல்வியைப்பற்றிய பல சிக்கலான பிரச்னைகளுக்கும் அமைதியாக ஆராய்ந்து வழிகாண வேண்டும்.

ஆகையால் கல்வி மந்திரி ஆரம்பக் கல்வியைப்பற்றி ஆராய ஒரு கமிட்டி அமைப்பதில் நமக்கு மகிழ்ச்சியே. ஆனால் ஆரம்பக் கல்வி இலவசமாகவும், கட்டாயமாகவும் செய்யப்படுவதற்கு ஏற்ற வழிகளை அக்கமிட்டி ஆராய்ந்தால்தான் பயன் உண்டாகும் என்று நினைக்கின்றோம்.

## சந்தாதார்களுக்கு அறிக்கை

1954 ஏப்ரல் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை—M. 18.
வட ஆற்காடு—NA. 13, 65. (both in arreur)
ராமனுதபுரம்—Rd. 12, 52.
திருநெல்வேலி—Tin. 54, 60.
திருச்சிராப்பள்ளி—Tri. 33.

குறிப்பு :—சந்தா நம்பர் விலாசத்தோடு கொடுக்கப்பட்டிருக்கிறது. மணியார்டர் கூப்பன்களில் சந்தா நம்பரையும் விலாசத்தையும் குறிப்பிடவும். தற்சமயம் சந்தா கட்ட அசௌகரியமுள்ளவர்கள் சந்தா கட்டக்கூடிய தவணையை முன் கூட்டியே தெரிவித்தால் நலமாயிருக்கும். வி. பி. அனுப்புவதில் உள்ள அசௌகரியங்களை உத்தேசித்து சந்தாவை முன்கூட்டியே அனுப்பிவிடும்படி நேயர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

—பத்திராதிபர்


## "புதுமை கண்ட பெரியோர்கள்"

(சிறுவர் நூல்நிலையங்களுக்கானது)

**5-வது, 6-வது வகுப்பு மாணவர்கள் இலகுவாகப் படிக்கக்கூடிய புத்தகம்.**

சென்னை அகில இந்திய ரேடியோ நிலையத்திலிருந்து குழந்தைகளுக்காக ஒலி பரப்பப்பட்ட புதுமை கண்டு பிடித்த ஆறு விஞ்ஞானிகளின் சரிதைகள் படங்களுடன் அகில இந்திய ரேடியோ ஸ்தாபனத்தின் அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

விலை அணு 12

புத்தகம் வேண்டுவோர் முன் பணத்துடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

**எஸ். ஐ. டி. யு. பப்ளிகேஷன்ஸ் லிமிடெட்,**
**520, ஹைரோடு, திருவல்லிக்கேணி, சென்னை—5**

# பாலர் கல்வி

## தொகுதி—18

### பொருளடக்கம்


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| | 43வது சென்னை ராஜ்யக் கல்வி மகாநாடு :— | |
| 1. | „ வரவேற்புப் பிரசங்கம் ... | 1 |
| 2. | „ துவக்கி வைத்த மைசூர் பிரதான மந்திரி „ ஸ்ரீ. கே. ஹனுமந்தையாவின் பேருரை ... | 3 |
| 3. | „ தலைமைப் பிரசங்கம்—ஸ்ரீ கே. குருவிலா ஜேகப்... | 6 |
| 4. | „ தீர்மானங்கள் ... | 12 |
| 5. | செய்தித் திரட்டு—14, 36, 64, 83, 98, 124, 140, 152, 164, 183, 203, 222 | |
| 6. | பத்திராதிபர் குறிப்புக்கள்—18, 41, 67, 87, 106, 144, 156, 172, 194, 206, 229 | |
| 7. | கல்வித்துறையில் ஆராய்ச்சிகள் ... | 21 |
| 8. | வாழ்வில் வளம் அல்லது யோகாசனங்களும் மனித வாழ்வும்—24, 59, 93, 118, 137, 160, 179, 214 | |
| 9. | புது ஆரம்பக் கல்வித் திட்டம் | 28, 80, 145 |
| 10. | வெளி நாட்டுச் செய்திகள் ... | 40 |
| 11. | படம் படிக்கும் பயிற்சி ... | 45 |
| 12. | ஔவையார் கண்ட ஆதாரக் கல்வி ... | 53 |
| 13. | கதைகளும் கதைகள் சொல்வதும் ... | 69 |
| 14. | இந்தியா எழுத்தறிவு பெற்றாக வேண்டும் ... | 73 |
| 15. | பின்னங்கள், அடிப்படையான பாடக் குறிப்புக்கள் ... | 75 |
| 16. | கடிதப்பெட்டி | 86, மார்கழி அட்டை iii, 208, 230 |
| 17. | நாட்டுப் பண்டிகைகளும் உற்சவங்களும் ... | 89 |
| 18. | வினுவிடைப் பகுதி ... | 102 |
| 19. | 23 வது தென்னிந்தியக் கல்வி வாரம் ... | 104 |
| 20. | ஐந்தாண்டு திட்டம்—கல்வி அபிவிருத்தி ... | 109 |
| 21. | வருஷ காலண்டர் ... | 115 |
| 22. | புதிய முறைச் சோதனைகள் ... | 129 |
| 23. | கேட்டுத் தெரிந்துகொள் ... | 148 |
| 24. | இந்தியாவின் கப்பல் படை ... | 151 |
| 25. | வளர்ச்சியும் பயிற்சியும் ... | 157 |
| 26. | Questionnaire on the Revision of the Curriculm and Syllabus for Elementary Schools மார்கழி இதழ் கடைசி பக்கம் | |
| 27. | பேச்சும் மொழியும் ... | 173 |
| 28. | பொங்கற்பெருநாள் மங்கல வாழ்த்திதழ் ... | 189 |
| 29. | குடியரசு தின விழா ... | 191 |
| 30. | மதிப்புரை ... | 193 |
| 31. | Amendments to Madras Educational Rules ... | 197 |
| 32. | பேச்சும் மூச்சும் ... | 199 |
| 33. | வாசிப்பு ... | 209 |
| 34. | கணக்கு—கற்பித்தல் ... | 219 |

7-6-54
700 Copies

Regd. No. M. 3473


THE

# S. I. T. U. PROTECTION FUND LTD.

A MUTUAL INSURANCE COMPANY FOR TEACHERS MANAGED BY TEACHERS

*Provides*

AN IDEAL SAVING-CUM-INSURANCE SCHEME FOR TEACHERS AND EDUCATIONAL OFFICERS — THE CHEAPEST TOO.

---

Here is another testimony to the good work of the Fund :

" I am proud of having been a member of the S. I. T. U. and its Protection Fund. I do not think any organisation can approach anywhere near the S. I. T. U. Protection Fund in promptness."

**(Sd.) N. R. RAGHUNATHACHAR,**
*Professor, Theagarajar College,*
*Madurai, 2-4-54.*

---

## WANTED

Agents to canvass membership to the Fund. Commission rates have been revised liberally upto 15% of the first year's premium and 2½% of renewals.

Apply to

**V. B. MURTHY,**
*Secretary.*



Printed by Sri T. K. Venkatesan at The Jupiter Press, Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited & Published by Sri S. Natarajan for "The South India Teachers' Union" 520, High Road, Triplicane, Madras.